# பொதுச் செலவின மீளாய்வுக் குழு (PERC)

பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள்
மற்றும் உள்ளூராட்சி அமைச்சு மீதான மீளாய்வு அறிக்கை

# உள்ளடக்கம்


| தலைப்பு | பக்க இல. |
|---|---|
| அறிமுகம் | 01 |
| முறையியல் | 02 |
| மீளாய்வு மற்றும் பரிந்துரைகள் | 04 |

# அறிமுகம்

2023.02.06 ஆம் திகதிய, 23/0256/604/030 ஆம் இலக்க, அமைச்சரவைத் தீர்மானத்திற்கமைய, பத்து முக்கிய அமைச்சுக்களின் செலவினங்களை மீளாய்வுசெய்வதற்காக பத்து குழுக்கள் தாபிக்கப்பட்டுள்ளன. பூச்சிய அடிப்படை வரவு செலவுத்திட்ட அணுகுமுறையைப் பயன்படுத்தி முறைப்படியான மீளாய்வு ஒன்றின் மூலம் அரசாங்க செலவினங்களை குறைப்பதற்கும், இலங்கையில் பொருளாதார மீட்சி செயல்முறையை வலுப்படுத்துவதற்காக அமைச்சரவைக்கு பரிந்துரைகளை வழங்குவதற்கும் குறித்த குழுக்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

பூச்சிய அடிப்படை வரவுசெலவுத் திட்டம் என்பது ஒவ்வொரு செலவின விடயமும் அதன் முந்தைய நிதி நிலைகள் எதுவாக இருப்பினும், அதன் தொடக்கத்தில் இருந்து நியாயப்படுத்தப்பட வேண்டிய வரவுசெலவுத்திட்ட முறையாகும். கடந்த ஆண்டு வரவுசெலவுத் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு ஆரம்பிக்கும் பாரம்பரிய வரவுசெலவுத் திட்ட முறைகளைப் போலன்றி, பூச்சிய அடிப்படை வரவுசெலவுத் திட்டத்தில், திணைக்களங்கள், அலகுகள் போன்றவை ஒவ்வொரு செலவினத்தையும் தனித்தனியாக நியாயப்படுத்தி, புதிதாக தமது நிறுவனத்தின் வரவுசெலவுத் திட்டத்தை உருவாக்க வேண்டும். இங்கு ஒவ்வொரு கருத்திட்டம், செயற்பாடு அல்லது செலவினத்தின் தேவைப்பாடு மற்றும் பெறுமதி என்பனவற்றினை தர்க்க ரீதியாக மதிப்பீடுசெய்வது அவசியமாகும். மிகவும் வெளிப்படைத்தன்மை, தேவையான வளங்கள், எதிர்பார்க்கப்படும் விளைவுகள் மற்றும் சாத்தியமான மாற்று வழிகள் என்பன பற்றி விரிவாக ஆய்வு செய்வதும் அவசியமாகும்

அமைச்சின் அடிப்படையான செயல்பாடுகள் மற்றும் விடயப்பரப்பினை உறுதிப்படுத்தல், இரட்டித்தல்கள், விரயங்கள் மற்றும் முக்கியத்துவம் குறைந்த கருத்திட்டங்கள் அல்லது செலவுகளைக் கண்டறிதல், ஏற்கனவே ஒதுக்கப்பட்டுள்ள ஒதுக்கீடுகளைப் பயன்படுத்துவதற்கான வினைத்திறனும் மற்றும் பயனுறுதியுமிக்க நடைமுறைகளை அடையாளம் காணுதல் மற்றும் செலவின பயனுறுதி என்ற வகையில் பூச்சிய வரவுசெலவுத் திட்ட அணுகுமுறை ஊடாக அமைச்சினால் தமது பொறுப்புகள் நிறைவேற்றப்படுகின்றன என்பதனை உறுதிப்படுத்துதல் போன்ற பொறுப்புக்களும் இக் குழுக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

அதற்கமைய, பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செலவினங்களை மீளாய்வு செய்வதற்காக பின்வரும் அலுவலர்கள் குழுவிற்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

| | | |
|---|---|---|
| திரு. ஏ.கே. சௌவிரத்ன | திறைசேரி பிரதிச் செயலாளர் | தலைவர் |
| திரு. எம்.எல். கம்மம்பில | பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் மேலதிக செயலாளர் | உறுப்பினர் |
| பேராசிரியர் டி.ஏ. பிரேமகுமார டி சில்வா | சிரேஷ்ட பேராசிரியர் சமூகவியல் துறை, கலை பீடம் கொழும்பு பல்கலைக்கழகம் | உறுப்பினர் |
| பேராசிரியர் தில்ருக்சி யாப்பா அபேவர்தன | பேராசிரியர்/தலைவர் கணக்கியல் துறை, வணிகவியல் மற்றும் முகாமைத்துவக் கற்கைகள் பீடம், களனி பல்கலைக்கழகம் | உறுப்பினர் |
| கலாநிதி முதித் சுஜீவ | சிரேஷ்ட விரிவுரையாளர், கணக்கியல் துறை, வணிகவியல் மற்றும் முகாமைத்துவ கற்கைகள் பீடம், களனிப் பல்கலைக்கழகம் | உறுப்பினர் |
| திரு. எம்.ஜே.எம். இப்ஹாம் | பணிப்பாளர், தேசிய வரவுசெலவுத் திட்ட திணைக்களம் | ஏற்பாட்டாளர் |

**முறையியல்**

அமைச்சின் பெயரில் குறிப்பிடப்படுள்ளதனைப் போன்று, கடந்த காலங்களில் தனித் தனி அமைச்சுக்களாகக் காணப்பட்ட, பொதுநிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சானது, மூன்று பிரதான பிரிவுகளையும் உள்ளடக்கி இருந்ததோடு, 2023 ஆம் ஆண்டில், அதன் வரவுசெலவுத் திட்ட ஒதுக்கீடு ரூபா 922 பில்லியன் என ஒதிக்கப்பட்டிருந்ததுடன், குழுவினால் குறித்த ஒதுக்கீட்டுடன் ஓய்வூதியங்கள் மற்றும் சேவை இழப்பீடுகள் உள்ளடங்கலாக பின்வரும் பிரிவுகளுக்கு அமைய அந்த மூன்று பிரிவுகள் தொடர்பாகவும் தனித்தனியாக ஆராய்ந்து பார்க்க வேண்டியிருந்தது.

| வகைகள் | ஒதுக்கீடுகள் (ரூ.பில்) |
|---|---|
| பொதுநிர்வாகம் | 04 |
| இறப்பு மற்றும் காயமடைந்த வீரர்களின் ஓய்வூதியம் மற்றும் சேவை இழப்பீடு | 418 |
| மாவட்ட செயலகங்கள் மற்றும் பதிவாளர் திணைக்களம் உள்ளடங்கலாக உள்நாட்டலுவல்கள் | 54 |
| மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி | 446 |
| **மொத்தம்** | **922** |

குழுவானது நிறுவனத்தின் பணியிலக்கு மற்றும் தொலைநோக்கு என்பனவற்றினை ஆராய்ந்து, அமைச்சின் அனைத்து நிகழ்ச்சித் திட்டங்கள்/ கருத்திட்டங்கள் / உப கருத்திட்டங்கள்/ செயற்பாடுகள் ஒவ்வொன்றும் அமைச்சின் குறிக்கோள்கள், பணியிலக்கு மற்றும் தொலைநோக்கு என்பனவற்றினை அடைவதற்கு எவ்வாறு பங்களிக்கின்றன என்பதையும் மீளாய்வு செய்துள்ளது. மேலும், தற்போதைய வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளிலுள்ள செலவினங்கள் அல்லது இரட்டித்தல்கள், விரயங்கள் மற்றும் முக்கியத்துவமற்ற கருத்திட்டங்கள் அல்லது செலவினங்களைக் கண்டறிதல் என்பனவற்றில் குழு கவனம் செலுத்தியுள்ளது. அத்துடன், தேசிய நோக்கங்களுக்கான முக்கியமான கருத்திட்டங்களை அடையாளம் காண்பதற்காக அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்கள் குறித்தும் குழு விசேட கவனம் செலுத்தியுள்ளது. அமைச்சின் செலவினங்களை மீளாய்வு செய்வதற்காக ஐரோப்பிய ஒன்றியம், சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கி என்பனவற்றினால் வழங்கப்பட்ட பொது நிதி முகாமையினை மதிப்பீடுசெய்வதற்கான கட்டமைப்பினையும்[1] குழு கருத்திற்கொண்டுள்ளது.

அரச துறைக்கான மனித வளத்தை நிர்வகின்ற அமைச்சாக இந்த அமைச்சு காணப்படுவதன் காரணமாக குழுவானது, இந்த அமைச்சிலுள்ள பதவியணி மற்றும் அரச துறையிலுள்ள மனித வளத்தின் பரப்பெல்லை என்பனவற்றிலுள்ள சிக்கல்களையும் கவனத்திற்கொள்வதோடு, சில பிரிவுகளில் மிகையான ஆட்சேர்ப்பு, தொழில்நுட்ப பணியாளர்கள் பற்றாக்குறை, கொள்கைப் பொருத்தப்பாடின்மை மற்றும் ஏனைய தொடர்புபற்ற பிரச்சினைகள் என்பனவற்றினையும் பரவலாக கலந்துரையாடியுள்ளது.

அரச தனியார் துறை கூட்டுமுயற்சி, வணிக செயல்முறை மீள்-நிறுவல் மற்றும் பயனர் கொடுப்பனவு முறைகள் என்பனவற்றினை உள்ளடக்கி, செலவினக் குறைப்பு முறைமைகள், வினைத்திறன் மேம்பாடு மற்றும் ஒவ்வொரு செலவினத்தினதும் செலவினத்திற்கான பயனுறுதி

[1] https://www.pefa.org/sites/pefa/files/resources/downloads/PEFA%202016_latest%20version_with%20links%20%282%29.pdf

என்பனவற்றிலும் குழுவின் கவனம் ஈர்க்கப்பட்டுள்ளது. இலக்குகளின் அடைவுகளை மதிப்பிடுவதற்காக பிரதான செயலாற்றுகை குறிகாட்டிகள் (KPIs) மீதும் குழு கவனம்செலுத்தியுள்ளது.

குழுவினால் கீழுள்ளவாறு ஐந்து கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டுள்ளன.

| திகதி | கலந்துரையாடல் |
|---|---|
| 17.03.2023 | விசாரணை அலுவல் நியதிகளுடன் தொடர்புபற்ற அமைச்சின் வரவுசெலவுத் திட்ட ஒதுக்கீடுகள் மீது முதலாவது கலந்துரையாடல் கவனம்செலுத்தப்பட்டது. |
| 31.03.2023 | • இ-கிராம அலுவலர் (e-GN) கருத்திட்டம், ஓய்வூதியத் திணைக்களம், நிதி ஆணைக்குழு, முப்படை மற்றும் இலங்கை பொலிஸ் அலுவலர்களுடன் பங்குதாரர் கலந்துரையாடல்.<br>• ஓய்வூதிய பணிப்பாளர் நாயகம்,கருத்திட்ட இயக்குநர் இ-கிராம அலுவலர் மற்றும் நிதி ஆணைக் குழு செயலாளர் ஆகியோர் செலவினக் குறைப்பு குறித்த எழுத்து மூல அவதானிப்புகள்/கருத்துக்களை சமர்ப்பித்துள்ளனர்.<br>• தேசிய திட்டமிடல் திணைக்கள பணிப்பாளர் நாயகம் மற்றும் அதிகாரிகளுடனும் வெளிநாட்டு வளங்கள் திணைக்கள அதிகாரிகளுடனும் கலந்துரையாடுதல். |
| 06.06.2023 | • பதிவாளர் நாயகத் திணைக்களத்துடனான கலந்துரையாடல்.<br>• குழுவின் வரைவு அறிக்கைதொடர்பான கலந்துரையாடல். |
| 11.07.2023 | • மாவட்ட நிர்வாகம் மற்றும் பிராந்திய அபிவிருத்தி தொடர்பான பிரச்சினைகள் குறித்து களுத்துறை மற்றும் கம்பஹா மாவட்ட செயலாளர்கள் மற்றும் அமைச்சின் சிரேஷ்ட உதவி செயலாளர் ஆகியோருடனான கலந்துரையாடல்.<br>• கொழும்பு மற்றும் தெஹிவளை - கல்கிசை மாநகர சபைகள், பேலியகொட மற்றும் களுத்துறை நகர சபைகள், ஜா-எல மற்றும் ஹொரண பிரதேச சபைகளின் அதிகாரிகள் மற்றும் தென் மற்றும் மேல் மாகாண உள்ளூராட்சி ஆணையாளர்கள் உடனான உள்ளூராட்சி தொடர்பான பிரச்சினைகள் குறித்த கலந்துரையாடல்.<br>• நலன்புரி நன்மைகள் சபை தலைவர் மற்றும் தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்கள அதிகாரிகள், இ-கிராம அலுவலர் கருத்திட்டப் பணிப்பாளர் என்போருடன் இ-கிராம அலுவலர் கருத்திட்டங்கள் தொடர்பிலான மேலதிக கலந்தாலேசனைகளும் மேற்கொள்ளப்பட்டது. |
| 11.08.2023 | குழுவின் வரைவு அறிக்கையை நிறைவுசெய்தல். |

## மீளாய்வு மற்றும் பரிந்துரைகள்

இந்த அறிக்கையை உருவாக்குவதற்காக மேற்கூறிய முகவர்களினால் வழங்கப்பட்ட கருத்துக்கள், அவதானிப்புகள், சமர்ப்பிக்கப்பட்ட விடயங்கள் மற்றும் ஆவணங்கள் என்பனவற்றினை குழு கருத்திற்கொண்டுள்ளது. அதற்கமைய, மீளாய்வுச் செயற்பாட்டின் போது கண்டறியப்பட்ட விடயங்கள் மற்றும் குழுவின் பரிந்துரைகள் என்பன கீழே விபரிக்கப்பட்டுள்ளன.

***01: சில பிரிவுகள் மற்றும் நிறுவனங்களில் மிகையானவும் இன்னும் சிலவற்றில பற்றாக்குறையாகவும் பதவியிணர்கள் காணப்படுவதானது வினைத்திறனின்மையை ஏற்படுத்துகிறது.***

மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களிலுள்ள மிகையான பதவியணியினால் நிர்வாக மற்றும் சேவை வழங்கல் சிக்கல்கள் மற்றும் குறைவான ஊதியம் மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்படும் பணியாளர்களை உருவாக்கியுள்ளமை குறித்து குழு அவதானித்துள்ளது. பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர்கள் மற்றும் ஏனைய அது போன்ற உத்தியோகத்தர் பதவிகள் பெரும்பாலும் கிராம உத்தியோகத்தர்களினால் நிறைவேற்றக்கூடிய கடமைகளாகக் காணப்படுகின்றன. அரசாங்க சேவைகள் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்டவுடன் இப் பதவிகளில் பெரும்பாலானவை வழக்கொழிந்த, பொதுத் திறைசேரிக்கு சுமையாக அமைகின்ற பதிவிகளாக அமையும். இந்த விடயம் குறித்து மாவட்ட மற்றும் பிரதேச நிர்வாக அதிகாரிகளும் உறுதிப்படுத்தியுள்ளனர்.

**பரிந்துரைகள் *:***

I. தொழில் தொடர்பிலான பூரண ஆய்வொன்றின் மூலமும் விளைவு அளவீடுகளின் பின்னர், பிரதேச மற்றும் மாவட்ட செயலக ரீதியில் பணியாளர்களின் எண்ணிக்கை தொடர்பில் மீளாய்வொன்றினை நடாத்துவதன் மூலம் தேவையான பணியாளர்களின் எண்ணிக்கையினை தர்க்க ரீதியாக வரையறுக்க முடியும்.
II. மிகையான ஊழியர்களைக் கொண்டுள்ள அலுவலகங்களிலிருந்தான புறஒப்படைப்புச் சேவை மற்றும் சேவைக் குலாம் சேவைகள் போன்ற அனைத்து தெரிவுகளும் தீர்ந்த பின்னர் மாத்தரமே ஆட்சேர்ப்பானது முற்றிலும் அவசியமானதாக இருக்கையில் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.
III. ஆட்சேர்ப்பானது முழுமையான தேவைப்படாக அமைவது, அதிக பணியாளர்கள் உள்ள நிறுவனங்களில் புறவழி செய்வித்தல் மற்றும் ஒன்றுசேர்செய்வித்தல் போன்ற அனைத்து மாற்றுத் தெரிவுகளும் முடித்த பின்னர் மாத்திரமே மேற்கொள்ளப்படல் வேண்டும்.
IV. அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறைகள் மூலம், உற்பத்தி தொடர்பான செயல்பாடுகளை ஊக்குவிப்பதில் ஈடுபடுவதற்காக,

தற்போதுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்களை, விரிவாக்கல் சேவைகள் மற்றும் தொழில்நுட்ப பதவிகள் போன்ற அத்தியாவசிய பதவியணிப் பதவிகளுக்கு உள்ளக ரீதியாக பணிக்கமர்த்தல்.

V. இரட்டித்தல்கள் என கருதப்படுகின்ற சேவைகளை இல்லாதொழிகின்ற சேவைகளாக மாற்றப்படுதல் வேண்டும்.

VI. ஆட்சேர்ப்பானது உண்மையான தேவைகளைக் கருத்தில் கொண்டு போட்டிப் பரீட்சைகள் மற்றும் சிறப்புத் தேர்வு வரிசை அடிப்படையில் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

VII. பெருமளவிலான ஆட்சேர்ப்புகள் தவிர்க்கப்படல் வேண்டும்.

### *02: பட்டதாரிகள் மத்தியில் அரச தொழில் வாய்புக்காக அதிகரித்த கேள்வி காணப்படல்.*

அரச சேவையில் ஒய்வூதியம் பெறக்கூடிய தொழில்களைப் பெறுவதற்காக பட்டதாரிகளுக்கு மத்தியில் எழுந்துள்ள அதிகரித்த தேவையானது, போராட்டங்கள் மற்றும் அழுத்தங்கள் என்பனவற்றிற்கும் இட்டுச் செல்கிறது என்று குழு கருதுகிறது. இந்த பிரச்சினையின் அரசியல் உணர்வு கடந்த காலங்களில் பட்டதாரி வேலைவாய்ப்பு திட்டம் மற்றும் நூறாயிரம் வேலைகள் திட்டம் போன்ற பாரிய ஆட்சேர்ப்புகளுக்கு வழிவகுத்தது. இதன் விளைவாக, அரச சேவையானது 1.4 மில்லியன் ஊழியர்களாக மிகை அதிகரிப்பிற்குள்ளானதோடு, பெருமளவிலான ஆட்சேர்ப்புகள் காரணமாக தனியார் துறையும் கற்றறிந்த ஊழியப்படை ஒன்றினை இழந்து நெருக்கடிகுள்ளாகியுள்ளது என்பதுவும் அவதானிக்கப்பட்டது.

**பரிந்துரைகள் *:***

i. பட்டதாரிகளை தொழில் முயற்சியாளர்காக மாற்றும் நோக்கில் அவர்களுக்கு திறன்கள் மற்றும் சலுகைக் கடன்களை வழங்கல்,

ii. டிஜிட்டல் நிலைமாற்றம் மற்றும் தகவல்தொழில்நுட்ப உள்கட்டமைப்பு என்பனவற்றில் அரச துறை அதிகம் முதலீடுசெய்வதன் காரணமாக ஆட்சேர்ப்பின் போது மென்பொருள் அபிவிருத்தி, தரவு பகுப்பாய்வு, இணையப் பாதுகாப்பு, தகவல்தொழில்நுட்ப கருத்திட்ட முகாமை மற்றும் திறனாய்வுச் சிந்தனை என்பனவற்றில் திறன்களைக் கொண்டுள்ள பட்டதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படுதல் வேண்டும்.

### *03: இ-கிராம அலுவலர் கருத்திட்டத்தை செயல்படுத்துவதிலுள்ள தாமதம்*

அமைச்சின் கீழால் செயற்படுத்தப்படுகின்ற இ-கிராம அலுலர் முனைப்பான கருத்திட்டம் இன்னும் பூரணப்படுத்தப்படவில்லை என குழுவின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. குழுவானது கருத்திட்டக்குழுவை கலந்துரையாடல் ஒன்றிற்கு அழைத்தது. அமைச்சின் மேலதிக செயலாளரும், இ-கிராம அலுலர் கருத்திட்டப் பணிப்பாளர் அரசாங்கத்திற்கும் அரசாங்கத்திற்கும் இடையில் தரவு பகிர்வு மற்றும் தகவல் சரிபார்த்தலினை இயலுமாக்குகின்ற ஒற்றை

டிஜிட்டல் பிரதிநிதித்துவத்துவம் மற்றும் முழுமையான அரசாங்கம் எனும் கருத்துருவினன அடிப்படையில் முக்கியமான தரவுத் தளமொன்றினை நிறுவுதல் மற்றும் அதன் மூலமான கருத்திட்ட வெளியீடு மற்றும் விளைவு என்பன பற்றி குழுவிற்கு விளக்கினார்.

2023 ஆம் ஆண்டுக்கான தேசிய வரவுசெலவுத் திட்டத்தின் கீழ் ரூபா 1,500 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளதும் அவதானிக்கப்பட்டது. பெறுகைகளை முன்கொண்டு செல்வதிலுள்ள சிக்கல்கள், நிரல் அமைச்சுக்களில் ஏற்படுகின்ற திடீர் மாற்றங்கள் மற்றும் முரண்பாடான கொள்கை முடிவுகள் என்பன கருதிட்டத்தை சுமூகமாக செயல்படுத்துவதில் தடையாக அமைந்துள்ளன என குறித்துக் காட்டப்பட்டது. எனவே, மேலும் காலதாமதத்தை தவிர்க்கும் வகையில் முதற்கட்டமாக கொழும்பு, கம்பஹா, களுத்துறை, புத்தளம் உள்ளிட்ட 07 மாவட்டங்களில் இத்திட்டம் அமுல்படுத்தப்பட்டு, பின்னர் கட்டம் கட்டமாக நாடு முழுவதும் நடைமுறைப்படுத்தப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. தரவு சேகரிப்புப் பணியானது களுத்துறை மாவட்டத்தில் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கிராம உத்தியோகத்தர்களுக்கு தேவையான தகவல்தொழில்நுட்ப அறிவு மற்றும் திறன்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும், வழங்குனர்களிடம் இருந்து பணிகளை பொருப்பேற்பதற்தற்குத் தேவையான மனித வளங்களுடன் தொடர்ச்சியான திட்டமொன்றும் வகுக்கப்பட்டுள்ளதாகவும் மேலும் விளக்கப்பட்டது. மேலும், தகவல் மற்றும் வளப் பகிர்வு குறித்து, நலன்புரி நன்மைகள் சபை தலைவர் மற்றும் தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரவியற் திணைக்கள அதிகாரிகளுடன் குழு கலந்துரையாடியுள்ளது. இ-கிராம அலுவலர் என்பது சேவை அடிப்படையிலான ஒரு தரவுத்தளமாகும். இது நலன்புரி நன்மைகள் சபையின் கீழ் "அஸ்வெசும நிகழ்திட்டத்திற்காக" சேகரிக்கப்பட்டதை விடவும், தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரவியற் திணைக்களத்தினால் சேகரிக்கப்பட்ட தரவுகளை விடவும் பரந்த அளவிலான தகவல்களை சேகரிக்கிறது.

**பரிந்துரைகள்*:***

i. இ-கிராம அலுவலர் கருத்திட்டம் படிப்படியாக செயற்படுத்தப்படல் வேண்டும் என்பதோடு பிம்பமிடல் (Scanning) ஒப்பந்தம் மாவட்ட வாரியாக வழங்கப்படலாம்.
ii. களுத்துறை மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகப் பிரிவுகளில் ஏற்கனவே அச்சிடப்பட்ட வளங்கள் மற்றும் பொருட்களைக் கொண்டு ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ள செயல்முறையை நிறைவு செய்து, அங்கு சேவைகளை வழங்கலினை ஆரம்பிக்கலாம். அதன்பின்னர் ஏனைய மாவட்டங்களிலும் இதனை செயல்படுத்தலாம்.
iii. பராமரிப்பு செலவினங்கள், செலவு குறைந்த முறையில் சேவை ஒப்பந்தங்கள் மூலம் புறஒப்படைப்புமுறையில் செயற்படுத்தப்படலாம்

iv. தரவு சேகரிப்பின் செயல்திறனை அதிகரிப்பதற்காக, இளங்கலை பட்டதாரிகளை கணிப்பீட்டாளர்களாக பயன்படுத்துவதற்காக பல்கலைக்கழகங்களுடன் கூட்டுச் சேருதல்.
v. இ-கிராம அலுலர் இன் நிலைத்த தன்மையை உறுதி செய்வதற்கான திட்டமிடல் வலுப்படுத்தப்படல் வேண்டும்*.*

***04: சேவைகளை வழங்கும் நோக்கில் பதிவாளர் நாயகத் திணைக்களத்தை வலுப்படுத்துதல்.***

பதிவாளர் நாயகம் மற்றும் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் அதிகாரிகள் குழுவிடம் கருத்தாடல்களை மேற்கொண்டனர். பிறப்பு, திருமணம், இறப்பு, காணி ஆகியவற்றைப் பதிவு செய்வதை முதன்மையாக இத்திணைக்களம் செய்து வருவதாக விளக்கப்பட்டது. சேவையை டிஜிட்டல் மயமாக்கும் பணியில் திணைக்களம் ஈடுபட்டுள்ளதோடு பல மேம்பாடுகளையும் செய்துள்ளது. இருப்பினும், குறிப்பாக தகவல் தொழில்நுட்பத் துறையில் மனித வளத் திறன் இல்லாதது அதன் முன்னேற்றத்தைத் தடுக்கிறது. திணைக்களம் அதன் நிறுவனச் செலவில் மூன்றில் இரண்டு பங்கை சேவைக் கட்டணங்கள் மூலம் ஈட்டுவதை அவதானிக்க முடிந்தது. சேவைக் கட்டணங்களின் கணிப்புக்கள் அனைத்துச் செலவையும் உள்ளடக்கவில்லை என்பதை குழு அவதானித்தது. இதில் LGN Cloud இல் சில செலவுகள் ICTA போன்ற பிற முகவரகங்கள் மூலமாகவும் ஏற்கப்பட்டுள்ளன. டிஜிட்டல் மயப்படுத்தல் செயல்முறையை துரிதப்படுத்த வேண்டும் என்று மேலும் அவதானிக்கப்பட்டது. மேலும் எளிமைப்படுத்தப்பட வேண்டிய செயல்முறை மற்றும் நடைமுறைகள் குறித்தும் எடுத்துரைக்கப்பட்டது. காணி உறுதிப் பதிவில் காணிகளை குறைமதிப்பீடு செய்வதால் அரசாங்க வருமானம் குறைவடைந்துள்ளமை தொடர்பில் குழு விசேட கவனம் செலுத்தியுள்ளது.

**பரிந்துரைகள்*:***

i. சேவைகளை வழங்குவதற்காக செலவினப் பிரதிபலிப்பு விலை பொறிமுறையொன்று நிறுவப்படுதல் வேண்டும்.
ii. வினைத்திறன் மற்றும் வெளிப்படைத்தன்மை என்பனவற்றினை மேம்படுத்தும் வகையில் சேவை வழங்கல் டிஜிட்டல் மயமாக்கலினைத் துரிதப்படுத்தல் வேண்டும்.
iii. தேவையான பதவியணி உருவாக்கம் மற்றும் ஆட்சேர்ப்புகளுடன் தகவல்தொழில்நுட்ப மனித வள கொள்திறன் மேம்படுத்தப்படல் வேண்டும்.
iv. பதிவாளர் நாயகத் திணைக்களத்தை மேம்படுத்துவதற்கும் நவீனப்படுத்துவதற்கும் வள ஒதுக்கீட்டிற்காக முறையான திட்டம் வகுக்கப்பட வேண்டும்.

v. காணி பதிவு செய்வதற்காக அரசாங்க பிரதான விலை மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டைப் பெறுவது கட்டாயமாக்கப்படல் வேண்டும்.

**_05:_ தேசிய அமைச்சுக்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட விடயங்களுக்காகவும் நிதி ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.**

நிதி ஆணைக்குழுவின் செயலாளர் தலைமையிலான அதிகாரிகளைச் சந்தித்த குழுவானது**,** மாகாண சபைகளுக்கான அதிகாரப்பகிர்வு மற்றும் நிதி ஒதுக்கீடுகள் குறித்தும் விரிவான கலந்துரையாடலை நடத்தியது. மாகாண சபைகளின் கீழ் வரும் பகிர்ந்தளிக்கப்பட்ட விடயங்களுக்காக தேசிய அமைச்சுக்களுக்கு அதிக நிதி வழங்கப்படுவதுடன்**,** மாகாண சபைகளுக்கு போதிய நிதி வழங்கப்படுவதில்லை என்ற விடயமும் விரிவாகக் கலந்துரையாடப்பட்ட முக்கியமான விடயங்களில் ஒன்றாக காணப்படுகிறது. நிதி ஆணைக்குழுவானது, மாகாண சபைகளுக்கு வழங்கப்படும் நிதியை, அரசியலமைப்பில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ள அளவீடுகளின் அடிப்படையில் நியாயமாகப் பகிர்ந்தளிக்கும். சில தேசிய அமைச்சுக்களுக்கு வழங்கப்பட்ட நிதி விநியோகம் மற்றும் அந்தந்த மாகாண சபைகளுடனான முறையான கலந்தாலோசனையின்றி திட்டங்களை அமுல்படுத்துவதானது இரட்டிப்பாக்கல் மற்றும் மேற்குவிதல் என்பனவற்றிற்கு வழிவகுத்துள்ளதும் அவதானிக்கப்பட்டது. அரசியலமைப்பின் ஒருங்கிணைந்த பட்டியலிலுள்ள விடயங்களுடன் தொடர்புபற்ற இப் பிரச்சினை மேலும் தீவிரமடையச் செய்துள்ளது.பொதுக் கல்வியினை நவீனமயமாக்கல் கருத்திட்டம் மற்றும் ஆரம்ப சுகாதார முறைமையை வலுப்படுத்தல் கருத்திட்டம் போன்ற வெளிநாட்டு நிதியுதவிக் கருத்திட்டங்களுக்கான ஒதுக்கீடுகள் ஏற்கனவே மாகாண சபைகளின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ளதை குழு அவதானித்துள்ளது. எனவே, வெளிநாட்டு நிதியுதவிக் கருத்திட்டங்களின் வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடுகளை நேரடியாக மாகாணங்களுக்கு வழங்குவதில் சட்டரீதியான தடைகள் எதுவும் காணப்படவில்லை.

இந்த பிரச்சினைக்கு பரிந்துரைகளை சமர்ப்பிப்பதற்காக நிதி ஆணைக்குழு சமர்ப்பித்த கருத்துகள், அவதானிப்புகள் மற்றும் முன்மொழிவுகள் என்பனவற்றினையும் அமைச்சிலிருந்தும் மற்றும் ஏனைய மூலங்களிலிருந்து பெறப்பட்ட தகவல்களையும் குழு கருத்திற்கொண்டது.

**பரிந்துரைகள்***:*

i. தேசிய அமைச்சுக்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட விடயங்களை ஒப்படைக்காதிருத்தல்.
ii. பகிர்ந்தளிக்கப்பட்ட விடயங்களை நீக்கி தேசிய அமைச்சுக்களின் எண்ணிக்கையினைக் குறைத்து, , அவற்றினை வரையறுக்கப்பட்ட விடயங்களைக் கொண்ட அரசியலமைப்பு ரீதியாக நிலையான அமைச்சுக்களாக அமைத்துக் கொள்ளல் வேண்டும்.

iii. தேசிய அமைச்சுக்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட விடயங்களுக்காக வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடுகளை வழங்காதிருத்தல் வேண்டும்.

iv. பகிர்ந்தளிக்கப்பட்ட விடயங்களுக்காக துறைவாரியாக மாகாண சபைகளுக்கு போதிய நிதி ஒதுக்கீடு செய்யப்படுதல் வேண்டும்.

v. தேசிய அமைச்சானது, நிதி ஆணைக்குழு மற்றும் மாகாண சபைகள் என்பனவற்றுடன் ஒருங்கிணைத்து, சனத்தொகை அளவு, சமூகப் பொருளாதாரக் குறிகாட்டிகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதித் தேவைப்பாடுகள் போன்ற நிதி ஆணைக்குழுவினால் பயன்படுத்தப்படுகின்ற தெளிவான மற்றும் வெளிப்படைத் தன்மையினையும் கொண்ட பங்கீடு செய்வதற்கான பிரமாணங்கள் அடிப்படையிலான சூத்திரங்களைப் அரசியலமைப்பின் இணையான அட்டவணையிலுள்ள விடயங்களுக்காக வழங்கப்பட்டுள்ள ஒதுக்கீட்டினை பகிர்ந்தளிப்பதற்கு பயன்படுத்துதல் வேண்டும்.

vi. நிதி ஆணைக்குழு தேசிய அமைச்சுக்களுடன் துறைசார் கலந்துரையாடல்களை நடத்த வேண்டும் என்பதோடு மாகாண சபைகளின் தேசிய அமைச்சுக்களின் வருடாந்த திட்டங்கள் பரஸ்பரம் பகிர்ந்து கொள்ளப்படல் வேண்டும்.

vii. அந்தந்த மாகாண சபைகளின் செலவினத் தலைப்புக்களின் கீழ் பன்முகப்படுத்தப்பட்ட விடயங்களுக்காக வெளிநாட்டு நிதியில் செயல்படுத்தப்படும் கருத்திட்டங்களுக்கான ஒதுக்கீடுகளை ஒதுக்கீடு செய்தல் வேண்டும்.

### *06: மாகாண சபைகளுக்காக வரையறுக்கப்பட்ட வருமான மூலங்கள் காணப்படல்*

வியாபார புரள்வு வரி (BTT) மாகாண சபைகளுக்கான முக்கிய வருமான மூலமாக இருந்துள்ளதாக குழு அடையாளம் கண்டுள்ளது. இருப்பினும், கொள்கைத் தீர்மானமொன்றின் மூலம் வியாபார புரள்வு வரி சேகரிப்பானது நிறுத்தப்பட்டுள்ளது. அதனை ஈடுசெய்யும் வகையில் அந்த வரிக்கு பகரமாக தேச கட்டுமான வரியில் மூன்றில் ஒரு பங்கு மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டதோடு அதுவும் பின்னர் நீக்கப்பட்டுள்ளது. மாகாண சபைகள் சேகரிக்கும் முத்திரைத் தீர்வை மற்றும் நீதிமன்றத் தண்டப்பண வருமானம் என்பன முழுமையாக உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு மாற்றப்படுவதால், அத்தகைய வருமானங்கள் மாகாண சபைகளுக்கு கிடைக்கப்பெறுவதில்லை. வருமான ஆதாரங்கள் வீழ்ச்சியடைந்துள்ள நிலையில், மாகாண சபைகளுக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட வரி உத்தியோகத்தர்களுக்கு மேற்கொள்வதற்கு போதிய பணிகள் இல்லை எனவும் வலியுறுத்தப்பட்டது.

**பரிந்துரைகள்:**

i. மாகாண சபைகள் போதிய வருமானத்தை ஈட்டுகின்றன என்பதனை உறுதிப்படுத்துவதற்காக மாகாண வருமான மூலங்கள் மீளாய்வு செய்யப்படல் வேண்டும்.
ii. பணிச்சுமை குறைவாக இருப்பதாலும், தற்போதுள்ள மாகாண சபையிலுள்ள ஊழியர்களுக்கு தமது சாதாரண கடமைகளின் ஒரு பகுதியாக வருமான சேகரிப்பு நடவடிக்கையில் ஈடுபட முடியும் என்பதனாலும், மேலதிக ஆட்சேர்ப்புகளை நிறுத்துவதற்காக மாகாண வருமான சேவையை வழக்கொழிந்த சேவையாக கருதப்படுதல் வேண்டும்.

## *07:* மாகாண சபைகளின் கண்காணிப்பு பொறிமுறையினை வலுப்படுத்துதல்

மாகாண சபைகளினால் நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்களின் வெளியீடுகள் மற்றும் நேரடி விளைவுகளை கண்காணிக்கும் முறைமை பற்றி குழு கேட்டறிந்துள்ளது. அவ்வாறானதொரு அமைப்பை ஏற்படுத்துவதற்கு நிதி ஆணைக்குழு இணக்கம் தெரிவித்த போதிலும், அவ்வாறு செய்வதற்கு அரசியலமைப்பிலுள்ள ஏற்பாடுகள் அல்லது சட்ட அதிகாரம் எதுவும் இல்லை எனவும் சுட்டிக்காட்டப்பட்டது. மாகாண சபைகளுக்கான நிதி ஏற்பாடுகளை நிதி ஆணைக்குழு பரிந்துரைப்பதன் காரணமாக, அவ்வாறு பரிந்துரைக்கப்பட்ட தொகைக்கு நடப்பது யாது என்பதையும், ஒதுக்கீட்டுத் தேவையை மதிப்பீடுசெய்வதற்காக பயன்படுத்தப்படுகின்ற அளவுகோல்கள் மீது ஏற்படுத்தப்பட்டுள்ள தாக்கங்கள் யாவை என்பதனையும் கண்காணிக்க வேண்டிய பொறுப்பும் அவர்களுக்குள்ளது என்று குழு கருதுகிறது. நிதி ஆணைக்குழுவினால் முன்னேற்ற மீளாய்வு மற்றும் வருடாந்த மீளாய்வுக் கூட்டங்கள் நடத்தப்பட்டு வருவதாகக் குறிப்பிடப்பட்டது. மாகாணங்களிலுள்ள அதிகாரம் ஆளுநர்களிடம் இருப்பதனால், ஆட்சேர்ப்பு, பதவி உயர்வு மற்றும் கொடுப்பனவுகள் வழங்குதல் என்பனவற்றில் அரசாங்க சுற்றறிக்கைகளுக்கு இணங்காமை தொடர்பில் உரிய முறையில் கண்காணிப்பிற்கு உட்படுத்தப்படாத சந்தர்ப்பங்கள் காணப்பட்டுள்ளன என்பதும் கலந்துரையாடலில் சுட்டிக்காட்டப்பட்டது.

**பரிந்துரைகள்*:***

i. நிதி ஆணைக்குழுவினால் வசதியளிக்கப்படுகின்ற உள்ளூர், மாகாண மற்றும் தேசிய மட்டங்களில் சிறந்த கண்காணிப்பு, மேற்பார்வை மற்றும் அறிக்கையிடல் முறைமையினை நிறுவுதல்.
ii. அரசாங்க சட்டதிட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு அமைய, ஆட்சேர்ப்பு மற்றும் கொடுப்பனவுகள் போன்ற நீண்ட கால நிதியிடல் தாக்கங்களுடைய விடயங்களில் தீர்மானம் எடுப்பது தொடர்பில், ஜனாதிபதி செயலகத்தினால் மாகாண ஆளுநர்களுக்கான பொதுவான வழிகாட்டுதல்களை வெளியிடலாம்.

### *08:* மாகாண சபைகளுக்கான ஒதுக்கீடுகளுக்கான கட்டுநிதி பொறுப்பான அமைச்சின் ஊடாக வழங்கப்படுகின்றமை

மூலதனச் செலவுகளுக்கான கட்டுநிதியானது திறைசேரி செயற்பாட்டுகள் திணைக்களத்தினால் நேரடியாக மாகாண சபைகளுக்கு வழங்கப்படுவதாக குழுவின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. எவ்வாறாயினும், தற்றுணிவு குறைந்த மீண்டுவரும் செலவினங்களுக்கான கட்டுநிதி மாகாண சபைகள் என்ற விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சின் மூலம் கையாளப்படுகின்றது. இந்த நடவடிக்கையின் மூலம் பல சிக்கல்கள் எழுந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது. அதிக கவனம் செலுத்தப்பட வேண்டிய மூலதனச் செலவினங்கள் நேரடியாக வழங்கப்பட்டுள்ளதோடு, குறைந்த தற்றுணிவுடன் கூடிய மீண்டுவரும் செலவினங்கள் நிரல் அமைச்சின் ஊடாக வழங்கப்பட்டுள்ளது எனவும் குழுவினால் அவதானிக்கப்பட்டது.

**பரிந்துரை*:***

மாகாண சபைகளுக்காக நேரடியாக மீண்டுவரும் செலவினங்களுக்கான கட்டுநிதிகளை வழங்குவதன் மூலம் நிர்வாக தாமதங்களைக் குறைத்தல்.

### *09:* பொது திறைசேரியினால் உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்படுகின்ற நிதிகளை பகுத்தறிதல்.

உள்ளூராட்சி அமைப்புகளால் (LGAs) வழங்கப்படும் சேவைகள் மூலம் வருமானம் ஈட்டுவதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதை குழு அவதானித்துள்ளது. இதற்கிடையில், உள்ளாட்சி அமைப்புகளுக்கு நேரடியாக செலுத்தப்படுகின்ற நீதிமன்ற அபராதம் மற்றும் முத்திரைத் தீர்வைகள் என்பனவற்றின் மூலம் கிடைக்கப்பெறுகின்ற வருமானத்தினை பயன்படுத்துவது தொடர்பில் எதுவித கண்காணிப்பும் காணப்படுவதில்லை. சுயமாக நிலைத்திருக்க முடியுமான உள்ளூராட்சி சபைகள் பல காணப்படுகின்றது. எவ்வாறாயினும், மாகாண சபைகள் ஊடாக வருடாந்தம் ரூபா 28 பில்லியனினை வழங்குவதன் மூலம் உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்கள் மற்றும் ஊழியர்களின் சம்பளச் செலவினம் திறைசேரியினால் சுமக்கப்படுகிறது. எனவே, காலவொழுங்கில் கட்டணங்களை திருத்தியமைக்க உள்ளாட்சி அமைப்புகளுக்கு எந்த ஊக்கமும் இல்லை. உள்ளாட்சி அமைப்புகளுக்கு கணிசமான வருமான நிலுவைகள் காணப்படுகின்றன. அதிகாரிகள் வருமான இலக்கை அடையவிடாது தடுக்கின்ற அரசியல் தலையீடும் இங்கு எடுத்துக்காட்டப்பட்டது. உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்படும் ஒதுக்கீடுகள் ஒவ்வொரு உள்ளாட்சி அமைப்பு அடிப்படையில் தனித்தனியாக மதிப்பீடு செய்யப்படுதல் வேண்டும் என்றும் குழு கருதுகிறது.

**பரிந்துரைகள்**:

i. உள்ளூராட்சி அதிகார சபைகளின் (LGAs) நிதி நிலமை, சுயமாக நிலைத்திருக்க முடியுமான வழிகளைக் கண்டறிவதற்காக நிபுணர் குழுவொன்றின் மூலம் மீளாய்வுசெய்யப்படுதல் வேண்டும்.
ii. உள்ளூராட்சி அமைப்புகளுக்கு நிதி வழங்குவதை தேசிய அரசாங்கம் படிப்படியாக நிறுத்த வேண்டும். அதன் முதற் கட்டமாக அனைத்து மாநகர சபைகளும் அரசாங்க நிதி ஒதுக்கீட்டிலிருந்து நீக்கப்படுதல் வேண்டும். ஐந்து ஆண்டுகளுக்குள் நகர சபைகளுக்கான பங்களிப்பும் படிப்படியாக குறைக்கப்படுதல் வேண்டும். மீதமுள்ள உள்ளூராட்சி அமைப்புக்களுக்காக வழங்கப்படுகின்ற நிதியும் ஒவ்வொரு விடய அடிப்படையில் மட்டுப்படுத்தல் வேண்டும்.
iii. ஒழுங்கான கால இடைவெளியில் கட்டணங்களை திருத்தியமைப்பதன் மூலம் உள்ளூராட்சி அதிகார சபைகளின் நிதி நிலமைகளை மேம்படுத்த வேண்டியிருக்கிறது. இதற்காக தேவையான ஆட்சேர்ப்புக்கள் மூலம் அரசாங்க விலை மதிப்புத் திணைக்களத்தினை பலப்படுத்த வேண்டியுள்ளது. விலை மதிப்பீட்டுச் செயற்பாடுகளை துரிதப்படுத்துவதற்காக அரச அலுவலர்களுக்கு ஏற்புடமையாக்கப்பட முடியுமான வகையில் பொருத்தமான சூத்திரங்கள் விலை மதிப்பீட்டு நடவடிக்கைக்காக அறிமுகப்படுத்தப்படவும் முடியும்.
iv. கட்டண திருத்தத்திற்காக சட்டங்களை திருத்தும் நடவடிக்கைகளை துரிதப்படுத்துதல் வேண்டும் என்பதோடு, உள்ளாட்சி அமைப்புகளின் வருமான மூலங்களையும் வலுப்படுத்தல் வேண்டும்.
v. வருமான சேகரிப்பை டிஜிட்டல் மயப்படுத்துவதற்காக உள்ளூராட்சி அமைப்பினால் நடவடிக்கை எடுத்திருந்த போதிலும், 2022 ஆண்டுக்கான இடைக்கால வரவுசெலவுத் திட்ட முன்மொழிவுக்கு ஏற்ப தானியங்கி மற்றும் நிகழ்நிலையில் கொடுப்பனவு முறைகளை மேலும் பலப்படுத்துதல் வேண்டும்.
vi. உள்ளூராட்சி வரிகளை செலுத்துவதற்கு அரசு நிறுவனங்கள் முன்னுரிமை வழங்குதல் வேண்டும்.
vii. தேசிய அரச நிறுவனங்களிலுள்ள மிகையான மனித வளத்திலிருந்து உள்ளூராட்சி நிறுவனங்களின் பற்றாக்குறையை ஈடுசெய்வதற்காக மனித வளங்களை ஒருங்கிணைத்தல் மற்றும் பகிர்தல்.
viii. உள்ளூராட்சி அமைப்புகளின் நிதிப் பயன்பாடு குறித்த கண்காணிப்பு பலப்படுத்தப்படல் வேண்டும்.

## *10:* பாரிய ஓய்வூதிய செலவினப் பட்டியல் மற்றும் பணிக்கொடை வழங்குவதில் தாமதம்

பொலிஸ் மற்றும் சிவில் அதிகாரிகளின் ஓய்வூதிய கொடுப்பனவுகள் ஓய்வூதிய பிரமாணக் குறிப்புக்கள் மூலம் நிர்வகிக்கப்படுவதாகவும், ஆயுதப்படைகளின் ஓய்வூதியங்கள் பல்வேறு சட்டங்களால்

நிர்வகிக்கப்படுவதாகவும் ஓய்வூதிய பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார். தேசிய வரவுசெலவுத் திட்டம் 2023 இல், சிவில் மற்றும் ஆயுதப்படை ஓய்வூதியம் (ரூபா 252 பில்லியன்), விதவை/தபுதாரர் மற்றும் அனாதை ஓய்வூதியம் (ரூபா65 பில்லியன்) மற்றும் பணிக்கொடை (ரூபா 58 பில்லியன்) என்பனவற்றிற்காக ரூபா 375 பில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், உயிரிழந்த மற்றும் காயமடைந்த படை வீரர்களுக்கான சேவை இழப்பீட்டிற்காக ரூபா 42.5 பில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. பணிக்கொடையாக செலுத்தவேண்டியுள்ள நிலுவைத் தொகை குறிப்பிடத்தக்களவில் காணப்படுவதாகவும், பணிக் கொடையினைப் பெற்றுக் கொள்வதற்காக ஓய்வூதியம் பெறுநர் நீண்டதொரு காத்திருப்புப் பட்டியலில் இருப்பதாகவும் ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம் குழுவிடம் தெரிவித்தார். ஒப்பந்தம் மற்றும் தற்காலிக அடிப்படையில் ஆட்சேர்ப்புச்செய்யப்பட்ட ஊழியர்களும் அந்தப் பதவியில் நிரந்தரமாக்கப்பட்ட பின்னர் ஓய்வூதியம் பெறுவதற்காக உரிமை பெறுவதன் காரணமாக அதன் மூலம் எதிர்காலத்தில் ஓய்வூதியச் கொடுப்பனவுச் செலவினம் அதிகரிக்கும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டது. ஓய்வூதிய நிதியம் ஒன்றினைத் தாபிப்பதன் அவசியம்தொடர்பில் குழுவில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டதுடன், ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகமும் இந்த முன்மொழிவிற்கு இணக்கம் தெரிவித்தார். ஓய்வூதிய பணிப்பாளர் நாயகத்தின் கருத்துக்கள் அவதானிப்புகள் மற்றும் முன்னொழிவுகள் என்பன பரிசீலிக்கப்பட்டு, இது தொடர்பில் குழுவின் பரிந்துரைகள் முன்வைக்கப்படுகின்றன

**பரிந்துரைகள்** *:*

i. பங்களிப்பு ஓய்வூதிய திட்டத்தினை அமுல்படுத்தி, உடனடியாக ஓய்வூதிய நிதியத்தினை ஏற்படுத்தல்
ii. உத்தேச பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தில் பணிக்கொடயினை உள்ளடக்காதிருத்தல்.
iii. அத்தகைய ஓய்வூதிய நிதியமொன்றினை நிறுவும் வரையில், தற்போதைய கழிப்பனவுகளைப் பயன்படுத்தி, விதவைகள்/ தபுதார்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதியத்தினை சுயாதீன நிதியமொன்றாக நிறுவுதல்
iv. தற்காலிக அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்படும் ஊழியர்களுக்கு ஓய்வூதிய உரிமையினை வழங்காதிருத்தல். அவர்களைப் பொது சேவை சேமலாப நிதியத்தின் கீழ் கருதுதப்பட முடியும்.

*11:* **இறந்த மற்றும் காயமடைந்த படை வீரர்களுக்குக்கான சேவை இழப்பீட்டுக்கான ஏற்பாடுகள் ஓய்வூதியத் திணைக்களத்திற்கு வழங்கப்படுகின்ற போதிலும், கொடுப்பனவுகள் முப்படைகள் மற்றும் பொலிஸாரினால் மேற்கொள்ளப்படுகின்றது.**

குழுவானது இப்பிரச்சினை தொடர்பாக ஓய்வூதிய பணிப்பாளர் நாயகம், பாதுகாப்பு அமைச்சு, பொதுப் பாதுகாப்பு அமைச்சு, முப்படைகள் மற்றும்

பொலிஸ் என்பனவற்றின் பிரதிநிதிகளுடன் விரிவாக கலந்துரையாடியுள்ளது. உயிரிழந்த மற்றும் காயமடைந்த படை வீரர்களுக்கான சேவை இழப்பீட்டுப் பெறுநர்களாக சுமார் 41,200 பேர் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. அவர்களில் சுமார் 33,000 பேர் இராணுவத்தைச் சேர்ந்தவர்கள் என்றும், 2,600 பேர் இலங்கைப் பொலிஸை சேர்ந்தவர்கள், எஞ்சியவர்கள் கடற்படை மற்றும் விமானப் படைகளைச் சாந்தவர்களாவர். நிரந்தரமாக ஊனமுற்ற படை வீரர்கள் மற்றும் தமது இன்னுயிரையும் துறந்த, அவர்களைச் சார்ந்தவர்களுக்கு வழங்கப்படும் சம்பளம் மற்றும் ஊதியங்கள், ஓய்வூதியம், ஊனமுற்றோர் கொடுப்பனவுகள் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் குறித்து இங்கு விளக்கமளிக்கப்பட்டது. ஓய்வூதியம் பெறுவோர் பற்றிய தரவுத்தளங்கள் இருந்தாலும், ஓய்வூதியத் திணைக்களம் வைத்துள்ள தகவல்கள் மட்டுப்படுத்தப்பட்டவை எனவும், வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவை இரட்டிப்பாகக் கொடுப்பதற்கான வாய்ப்புகள் இருப்பதாகவும் குழுவின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது.

ஓய்வூதியத்தினை வழங்குவதற்காகவே ஓய்வூதியத் திணைக்களம் செயற்பட்ட போதிலும், ஓய்வூதியத் திணைக்கத்திற்கு வழங்கப்படுகின்ற ஒதுக்கீடுகளில் பத்தில் ஒரு பங்கு முப்படையினால் வழிநடாத்தப்படுகின்றது என்று குழுவினால் அவதானிக்கப்பட்டது. ஆதலால், தரவுத்தளத்தை மேம்படுத்துவதன் மூலமும் அதன் வெளிப்படைத்தன்மையை அதிகரித்து, இச்சிக்களை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். இறந்த மற்றும் காயமடைந்த வீரர்களுக்கான சேவை இழப்பீடானது, ஓய்வூதியக் கொடுப்பனவு அல்ல என்றும், 1982 ஆம் ஆண்டில், அதாவது போரின் ஆரம்ப கட்டத்தில் எடுக்கப்பட்ட கொள்கைத் தீர்மானங்களுக்கு அமைய வழங்கப்படுகின்ற இழப்பீடு என்றும் பாதுகாப்பு அமைச்சின் பிரதிநிதிகளினால் தெளிவுபடுத்தப்பட்டது. ஒதுக்கீடுகள் ஓய்வூதிய திணைக்களத்திற்கு வழங்கப்படுவதனால், ஓய்வூதிய பணிப்பாளர் நாயகம் பாராளுமன்றத்திற்கு பொறுப்புக்கூற வேண்டியவர் என குழு வலியுறுத்தியுள்ளது. எனவே, குழுவினால் பரிந்துரைகளை வழங்குவதற்காக மேலே வெளியிடப்பட்ட தகவல்களையும் குழு கருத்திற்கொண்டது.

**பரிந்துரைகள்*:***

I. இரட்டிப்பாதலினைத் தவிர்ப்பதற்கான அடையாளம் காணலின் அடிப்படையாக தேசிய அடையாள அட்டை இலக்கத்தினை பயன்படுத்தி தரவுத்தளத்தை பேணிச்செல்லல்.
II. மேற்கொள்ளப்படுகின்ற கொடுப்பனவுகள் ஓய்வூதியத் திணைக்களத்தின் பொறிமுறையின் கீழ் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

## *12:* குறிப்பிடத்தக்களவில் அதிகரித்துள்ள வாடகை செலவுகள் மற்றும் பயன்படுத்தப்படாத பொது கட்டிடங்கள்

அரச நிறுவனங்களுக்கு கட்டிடங்களை நிர்மாணிப்பதற்காக அரசாங்கம் பல பில்லியன் ரூபாக்களை செலவிட்டுள்ளதாக கலந்துரையாடலில் சுட்டிக்காட்டப்பட்டது. இருப்பினும், சில பொதுக் கட்டிடங்கள் வணிகப் பகுதிகளில் அமையப் பெற்றிருந்தும் கூட அவை குறைபயன்பாட்டைய கட்டிடங்களாக உள்ளன. ஆயினும், மேலும் பல அரசு நிறுவனங்கள் வாடகைக் கட்டிடங்களில் அமையப்பெற்றிருந்தன. அதிக வர்த்தகப் பெறுமதியினைக் கொண்டுள்ள பகுதிகளில் அமைந்துள்ள கட்டிடங்களின் பல ஆரம்ப மாடிகளை தனியாருக்கு வாடகைக்கு விடுவதற்கான இயலுமை காணப்படுவதோடு, அது இரு தரப்பினருக்கும் பயனளிக்கும் என்பதும் அவதானிக்கப்பட்டது.

**பரிந்துரைகள்**

i. பொது கட்டிடங்களின் தறைப் பயன்பாடு குறித்து கணக்காய்வு நடாத்தப்பட்டு, அவற்றின் உகந்த பயன்பாட்டை உறுதி செய்தல்.
ii. முடிந்தவரை தனியார் கட்டிடங்களிலுள்ள அரசு அலுவலகங்களை பொது கட்டிடங்களுக்கு இடமாற்றுதல்.
iii. மிகவும் சாதகமான நியதிகளின் கீழ் சொத்துக்களை அபிவிருத்தி செய்வதற்கு அல்லது குத்தகைக்கு விடுவதற்காக அரசாங்கம் தனியார் துறை நிறுவனங்களோடு ஒத்துழைப்புடன் செயற்பட்டு அரச தனியார் கூட்டுமுயற்சிக்கான வாய்ப்புகள் தொடர்பில் ஆராய்ந்து பார்த்து, அத்தகைய கூட்டுமுயற்சிகளை ஏற்படுத்தல்.
iv. பொது நிருவாக அமைச்சுக்கு சொந்தமான**,** கொழும்பு 07 இல் அமைந்துள்ள மாநாட்டு அடுக்கு தொடர் மாடி (Summit Flats) போன்ற குறைபயன்பாடுடைய காணிகளில் அரச ஊழியர்களுக்காக போதுமான குடியிருப்பு வசதிகளுடன் கூடிய கட்ட்டங்களை அரச தனியார் கூட்டுமுயற்சியுடன் வர்த்தக வியாபார நோக்கங்களுக்காக தாபித்தல்.
v. அரச நிறுவனங்கள் சுற்றுலா விடுதிகள் மற்றும் விடுமுறை இல்லங்கள் என்பனவற்றை கட்டுவதை நிறுத்துதல்.
vi. முழுமையான ஆய்வுவொன்றிற்குப் பின்னர், இழப்பைச் சந்திக்கின்ற பயன்படுத்தப்படாத சொத்துக்கள் கைமாற்றல்.
vii. செலவினங்களை மிகுதிப்படுத்துவதற்கும், தனிநபர் வாடகைச் செலவுகளைக் குறைப்பதற்கும் காரணமாக அமையும் வகையில் வளங்களைத் திரட்டுதல் மற்றும் ஏனைய அரச நிறுவனங்களுடன் வசதி வாய்ப்புக்களை பகிர்ந்து கொள்ளல்.

### *13:* எரிபொருள் மற்றும் வாகனத் தொகுதிகளைப் பராமரிப்பதற்கான அதிகரித்த செலவினம்

குறித்தொதுக்கப்பட்ட வாகனமொன்றினை வழங்குவதற்கான செலவினமானது போக்குவரத்துக் கொடுப்பனவை வழங்குவதற்கான செலவினத்தினை விடவும் குறிப்பிடத்தக்களவில் அதிகமாக இருந்துள்ளதனை குழு அவதானித்தது. குறித்தொதுக்கப்பட்ட வாகனங்களை வழங்குவதற்காக அரசாங்கம் கணிசமான தொகையை குத்தகை மற்றும் வாடகைச் செலவினங்களுக்காக செலுத்த வேண்டியிருந்தது. ஆதலால், மறைமுக செலவுகள் இன்னும் அதிகமாக இருக்கலாம். அதேவேளை, நிகழ்நிலை வாடகை வாகன சேவை வசதிகள் கிடைப்பனவாக உள்ளதனால், அரச அதிகாரிகள் தமது சொந்த வாகனங்களைப் பயன்படுத்துவதை விட அதிகமான பயணத் தேர்வுகளை இதில் கொண்டுள்ளனர்.

**பரிந்துரைகள்***:*

1. குறித்தொதுக்கப்பட்ட வாகனங்களை வழங்குவதற்கு பதிலாக போக்குவரத்து கொடுப்பனவுகளைப் பெறுவதனை ஊக்குவித்தல்.
2. எந்தவொரு சந்தர்ப்பத்திலும், அரச ஊழியர்களுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட வாகனங்களைக் குறித்தொதுக்கக் கூடாது.
3. உகந்த பயன்பாட்டை உறுதி செய்வதற்காக அரச துறை வாகனங்களில் ஜிபிஎஸ் கண்காணிப்பு முறைமையினைப் பொருத்துதல்.
4. அரச உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படும் போக்குவரத்து கொடுப்பனவுகள் வெவ்வேறு சேவைகளுக்கு இடையில் வேறுபடுவது அவதானிக்கப்பட்டது. தற்போதைய பொருளாதார நெருக்கடியை கருத்திற் கொண்டு அதனை சீராக்கல் வேண்டும்.

### *14:* அரச துறையில் மின்சார நுகர்வு பொதுத் திறைசேரிக்கு ஒரு சுமையாகும்.

அரச துறையானது மின்சாரத்தின் முக்கிய நுகர்வோராக காணப்படுவதோடு அதன் சுமையினைப் பொதுத் திறைசேரி ஏற்க வேண்டும் என்றும் குழு அவதானித்துள்ளது. அனைத்து மாகாண சபைகள், மாவட்ட செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்கள் குறித்த அமைச்சின் கீழ் வருவதனால், அது ஒரு முதன்மையான நுகர்வோராக மாறியுள்ளது. மறுபுறம், தன்னிறைவு பெறுவதற்கு புதுப்பிக்கத்தக்க வளங்களைப் பயன்படுத்துவதற்கு அரசு அலுவலகங்கள் அதிக உள்ளாற்றலினைக் கொண்டுள்ளதனால் அவற்றினால் தேசிய மின் வலையமைப்பிற்கும் பங்களிப்புச் செய்யவும் முடியும்.

**பரிந்துரைகள்***:*

1. அரச நிறுவனங்கள் எரிசக்தி துறையில் தன்னிறைவு அடையும் வகையில் சூரிய சக்தி பெனல்களை மின் பாவனைக்கான மாற்று வழியாகப் பயன்படுத்தல்.

ii. அரச தனியார் கூட்டுமுயற்சி என்ற வகையில் அரச கட்டிடங்களில் சூரிய சக்தி பெனல்கள நிறுவுவதற்காக தனியார் துறையினரை ஊக்குவித்தல்.

### *15:* பாராளுமன்ற உறுப்பினர்களின் அலுவல்கள் பல நிறுவனங்களால் கையாளப்படுகின்றன

பாராளுமன்ற உறுப்பினர்கள் தொடர்பான அலுவல்கள் பாராளுமன்றம் மற்றும் அமைச்சின் பாராளுமன்ற அலுவல்கள் பிரிவினால் கையாளப்படுவதாக அவதானிக்கப்பட்டது. இந்த ஏற்பாட்டின் மூலம் பொதுச் செயற்பாடுகளுக்கான செலவினம் அதிகரித்துச் செல்வதோடு, மொத்த செலவுகளும் ஒரே இடத்தில் பிரதிபலிப்பதில்லை. கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்கள் சேவைகளைப் பெறும் பொருட்டு பல்வேறு இடங்களுக்குச் செல்ல வேண்டியிருப்பதால், இது அவர்களுக்கு சிரமங்களை ஏற்படுத்துகிறது. ஆதலால், அனைத்து சேவைகளையும் பாராளுமன்றத்திற்கு மாற்றுவது நன்மை பயக்கும், இதன் மூலம் அனைத்து செயல்பாடுகளையும் வினைத்திறனுடனும் எளிதாகவும் செய்துகொள்ளலாம்.

**பரிந்துரை*:***

பாராளுமன்ற உறுப்பினர்களின் அலுவல்களை பாராளுமன்றமே நிர்வகிக்க வேண்டும்.

### *16:* அரச கரும மொழிகள் என்ற விடயத்தினை பல நிறுவனங்கள் கையாளுகின்றன.

அரச கரும மொழிகள் தொடர்பான விடயத்தை பல அரச நிதியளிப்புச் செய்யப்பட்ட நிறுவனங்கள் கையாள்வதனை குழு அவதானித்தது. அவை, அமைச்சின் அரச கரும மொழிப் பிரிவு, அரச கரும மொழிகள் திணைக்களம், அரச கரும மொழிகள் ஆணைக்குழு மற்றும் தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் என்பனவாகும். இது தவிர, மொழிகளைக் கையாளுகின்ற பல பல்கலைக்கழகங்கள் மற்றும் நிறுவனங்கள் காணப்படுகின்றன. இது இரட்டிப்பாக்கல், வினைத்திறனின்மை மற்றும் மேலதிக செலவினம் என்பனவற்றிற்கும் வழிவகுக்கும்.

**பரிந்துரைகள்***:*

i. இந்த நிறுவனங்களின் தொழிற்பாடுகள் மீளாவுசெய்யப்பட வேண்டியுள்ளதோடு அவற்றின் பரப்பெல்லை மற்றும் வகிபாகங்கள் என்பனவும் வரையறுக்கப்படல் வேண்டும்.
ii. தேவைப்படின் மீள்கட்டமைப்பு செய்யப்படுதல் வேண்டும்.

| பெயர் | பதவி | கையொப்பம் |
|---|---|---|
| திரு. ஏ.கே. செனவிரத்ன | திறைசேரி பிரதிச் செயலாளர் | கையொப்பம் தெளிவற்றது |
| திரு. எம்.எல். கம்மம்பில | பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் மேலதிக செயலாளர் | கையொப்பம் தெளிவற்றது |
| பேராசிரியர் டி.ஏ. பிரேமகுமார டி சில்வா | சிரேஷ்ட பேராசிரியர் சமூகவியல் துறை, கலை பீடம் கொழும்பு பல்கலைக்கழகம் | கையொப்பம் தெளிவற்றது |
| பேராசிரியர் தில்ருக்சி யாப்பா அபேவர்தன, | பேராசிரியர்/தலைவர் கணக்கியல் துறை வணிகவியல் மற்றும் முகாமைத்துவக் கற்கைகள் பீடம், களனி பல்கலைக்கழகம் | கையொப்பம் தெளிவற்றது |
| கலாநிதி முதித் சுஜீவ | சிரேஷ்ட விரிவுரையாளர், கணக்கியல் துறை, வணிகவியல் மற்றும் முகாமைத்துவ கற்கைகள் பீடம், களனிப் பல்கலைக்கழகம் | கையொப்பம் தெளிவற்றது |